சிறுகமணி ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

* 530 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு நல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி வட்டம், சிறுகமணி பஞ்சாயத்தைச் சேர்ந்த புதுக் கோட்டையிலும், மலையப்ப நகரிலும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் வேலை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலைமையில் உள்ளது?

(உ) காலதாமதத்திற்கு உரிய காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) சிறுகமணி பஞ்சாயத்தைச் சேர்ந்த புதுக்கோட்டையிலும், மற்றும் மலையப்ப நகரிலும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு எந்தவித திட்டமும் இல்லை.

(இ) எழவில்லை.

(உ) எழவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஊர் களிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர வேண்டுமென்று அந்த ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனோ அவை இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவல் தரு கிறார். ஒருவேளை, அவற்றைச் செய்துதர பணம் இல்லையா, அல்லது நல்ல மனம்தான் இல்லையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனைக்கு வரவில்லை என்று திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். தெருக்குழாய்களுக்கு தானி யங்கி விசையேற்றம் மூலம் ஆட்டோமேடிக் பிரஷர் பம்ப் மூலம் தண்ணீர் செலுத்த 1962-லே வழிவகைகள் செய்யப்பட்டன. நிதிப் பற்றாக்குறை காரண மாக சிறுகமணி பஞ்சாயத்தினால் அந்தப் பம்ப் செட் வாங்கி வைக்க இயலவில்லையென்று தெரிவித்திருக்கிறார். கையினால் இயக்கப்படும், 'ஹேண்ட் பிரஷர் பம்ப் செட்' மூலம் குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

Panchayats without Harijan Members

* 531. THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of village panchayats without elected Harijan members?

1972 மார்ச் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1,528 பஞ்சாயத்துக்களில் அரிசனங்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

திரு. டி. கணபதி : தலைவர் அவர்களே, குறைந்த வாக்காளர்கள் உள்ள பஞ்சாயத்துக்களிலும் அரிசனங்களுக்கு இடம் ஒதுக்கப்படவில்லை. கூடுதலான வாக்காளர்கள் இருக்கும் இடங்களில் போட்டியிருப்பதால் அங்கேயும் அரிசனங்கள் தேர்ந்தெடுக்கப்பட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்தி, எல்லா பஞ்சாயத்துக்களிலும் அரிசனங்களுக்கு ரிசர்வ் தொகுதி அமைத்துக்கொடுக்கும் வகையில் சட்டம் திருத்தியமைக்கப் படுமா? அல்லது பெண்களுக்கு இடம் ஒதுக்கப்படுவதைப் போன்று 'கோ-ஆப்ட்' முறையில் அரிசனங்களுக்கு இடம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரிசனங்களும் இடம் பெறுவதற்கான முறையில் விதிமுறைகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் 752 ஊராட்சிகளிலே அரிசனங்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். 1203 ஊராட்சிகளில் உப தலைவர்களாக அரிசனங்கள் இருக்கிறார்கள். 1528 ஊராட்சிகளிலே பாதிப்பேருக்குமேல், அரிசனங்கள், பழங்குடி மக்கள் ஆக இருப்பதால் அரிசனங்களுக்கு என்று தனியாக இடம் ஒதுக்க வேண்டியதில்லை என்ற கருத்தின் அடிப்படையில்தான் 1528 இடங்களில் தனியாக ஒதுக்கவில்லை.

Pay scales of Town-Planning Inspectors

* 532 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that representations have been received from the Town Planning Inspectors of 90 Municipalities including Corporation of Madurai for revision of wages; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாடு நகரமைப்பு தொழில் நுட்ப உட்பிரிவு பணியாளர்களின் சங்கத்திடமிருந்தும் மற்றும் சில நகரசபைகளிலுள்ள நகர அமைப்பு சார்பு நிலை பணியாளர் தொகுதியிடமிருந்தும் சில பதவிகளுக்கு சம்பள விகிதங்களை திருத்தி அமைக்கக் கோரி முறையீடுகள் வந்துள்ளன.

(இ) இப்பொருள் அரசின் கவனத்திலுள்ளது.